27-1-1991


Subscription

Inland : Rs. 100/-
*For Advertisements*

Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89

*Established : 1841: A Christian Weekly: Published Every Friday*

**Vol:- 150 Jaffna, Friday 14 December 1990 No: 26**

RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROAEH TO ANY PEOPLE

*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.


## 175th Anniversary of the A. C. M. (1816 - 1991)

### A leaf from the past

**Rev. James Richrads**

Rev. James Richards belonged to the famous hay - stack group, of Williams College.

He came to Jaffna in 1816 with his wife and five other missionaries. He served in Jaffna for six years and died in August 1822. After his death his wife SARAH married Rev. Joseph Knight of the C. M. S.

The following is the notice given in the Missionary Herald about the demise of Rev. James Richards.

"Since our letter of May last but few things of an interesting nature have transpired. Our prospects generally are encouraging. While as a mission, we have received much at the hand of God, which demands our gratitude and praise. We have also received much to teach us to be humble and watchful. Last year Mrs. Poor was taken from our number. Now Mr. Richards!

Another voice speaks to us from the grave. Our elder brother is no more. Brother Richards who was so long burdened with sickness & pain has gone to his heavenly rest. It was not till June last that our fears concerning him were more than usually excited. At that time his disorder began to prey upon him with increased violence and continued to do so till the day of his death, which was on the 3rd of August. (1822). Some time previous to this last violent attack he seemed to have an impression that the time of his departure was at hand. His mind was led much to self examination, and to a review of the past, that he might if it were possible to find every false ground, upon which he rested for acceptance with God. This self - examination resulted in a confidence of his good estate. This confidence appeared to attend him to the hour of his dissolution. Certainly death was to him disarmed of its terrors. He hoped for a release from pain only in death and in the enjoyment of his Saviour. His sufferings were long and several. But we doubt not that the voice which by disease was so long forbidden to join us in prayer and praise, now bears a part in the song of Moses and the lamb. With the company of those who through faith and patience have inherited the promises.

(Continued on page 8)

## The Relevance of Christmas

★ **D. J. A.** ★

Christmas was an event of nearly 2000 years ago. We live in an age when we always go for the latest editions of a book ask for the latest news, and look for the latest model of a gadget. We believe that somehow the latest is more up-to-date, more adequate and relevant to our present needs. The question therefore can legitimately be asked of what relevance can Christmas be for our age and time. This is an age of space flights and computers and not of angels or of shepherds in the field or of men riding on camels. Of what relevance can Christmas be for this last decade of the 20th century? The Oxford dictionary in defining the word "relevance" illustrates its use by a writer in the Spectator of 1890 exactly a century ago. "What relevance had such a fact to the duty of the hour?" It goes on to then give the meaning of the word, "Bearing upon, Connected with, pertinent to, the matter in hand." "The duty of the hour" or "the matter in hand" is something we can all understand although we may differ in identifying the duty or the matter in hand. If relevance means pertaining to the matter in hand, we must ask what has Christmas to do with "the matter in hand." For all of us trying to face up to the challenges and opportunities, the disappointments, and despairs of our time "the matter in hand" is surely issues of life and death, of sickness and health, of poverty and wealth, of law and order, of oppression and justice, of war and peace.

"Give peace in our time O Lord," are the words in the order of Morning Prayer in our Book of Common Worship, and "give unto thy servants that peace which the world cannot give," are again words from the order of Evening Prayer. Morning and Evening the Church has prayed for peace and continues to pray for it. For millions in Sri Lanka today their hearts sincere longing and prayer must be "give peace in our time O Lord," in the midst of death and destruction, in the midst of the disappearances and imprisonments, in the midst of the helpless refugees and the injured and the bereaved. Surely peace has everything to do with "the matter in hand," it has something to tell us about "the duty of the hour."

Christmas is the birth of him who came as "the Prince of Peace," of the one who brought "the peace which the world cannot give." It was the peace that comes from above, from beyond, not a peace of man's contriving compromises or of his designs and diplomacies or of man's pacts and agreements. It is the peace that becomes a reality only in relation to God's purpose for the human race and for all life on earth. "Does it seem strange to you" asks T. S. Eliot in his Murder in the Cathedral, "that the angels should have announced Peace, when ceaselessly the world has been stricken with war and the fear of war." It may seem strange but it is to a world stricken with war and the fear of war that Christmas is as relevant today as when the angels first declared their praise to God "on earth peace to all in whom he delights" (Lk 2 : 14 REB).

Soren Kierkegaard has this to say of the other message of the angels to the shepherds, "unto you is born this day a Saviour," yet it was night when the Saviour was born, and it becomes day in the middle of the night when the Saviour is born. "Christmas is the birth of the Saviour, the deliverer, the liberator, the breaking in of day in the middle of the night of the light that shineth in darkness, of Peace in the midst of war and the fear of war. Day in the middle of the night, and yet we live in times when it seems truer to speak of "Darkness at Noon," as reflecting more accurately the reality of the world in which we live. What then can the relevance of Christmas be to this world of darkness, to this world of war and the fear of war?

The Prince of Peace who brought to us the peace from above, the peace from beyond, the peace which the world cannot give gathered a group of disciples to him and commissioned them "Blessed are the peacemakers," and to those whom he called to be "peacemakers," he assured "Peace is my parting gift to you, my own peace, such as the world cannot give." To share that parting gift of the Prince of Peace, the Saviour Christ is the Church's "duty of the hour.". The Saviour Christ was able to give his parting gift only through entering into unity and solidarity with the world of strife and suffering, of torture and death itself, and the Church can fulfil its "duty of the hour" only through such unity and solidarity with him who came as the Prince of Peace and with the world of strifes, suffering and death, The Relevance of Christmas is that there is hope for a world with which God has entered into solidarity.

## FEDERAL SOLUTION RECOMMENDED NIHAL JEYAWICKRAMA

Mr. Nihal Jeyawickrama, formerly Secretary of the Ministry of Justice in the S L F P government and now a law lecturer at the University of Hong Kong has in a leading article in the South China Morning Post written on the Sri Lankan problem under the title "Death is Way of Life on Paradise Island".

After thirteen years of U N P government the basic issues in Sri Lanka he claims remain unsolved. In seeking a solution Sri Lanka's greatest asset is not its soldiers or its terrorists or even its politicians. It is its people.

Over a 60 year period of self-government, they have utilised to their advantage unfamiliar devices such as universal adult franchise and a Westminster Whitehall parliamentary system. But in the last decade, they have been excluded from the decision - making process.

It is now time to bring them back into the mainstream of political activity. In the south, this would require restoration of democratic parliamentary government. In the north, the realities of the current situation suggest that nothing short of a federal system of government is capable of securing the unity and integrity of Sri Lanka.

But the continuing tragedy of Sri Lanka is that in the bustling capital of Colombo, where today's decision makers are safely enclosed in comfort and security, where hotels are again brimming with tourists, where supper clubs are crowded and noisy and there is music, laughter and plenty of liquor, there appears to be an almost eerie insensitivity to the agony and the misery that continues unabated in the killing fields.

Even if it does exist in some quarters, the political will to solve national problems by means other than fire - power is hardly discernible.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AT REST

### Mr. J. J. Niles

The death occurred in Toronto in Canada on the 12th of November of Mr. J. J. Niles, a former Director of the Jaffna College Institute of Agriculture Maruthanamadam and earlier of the Government Agriculture Department.

Mr. Niles was the first national to take charge of the Institute after a period during its fledgling days when the new Project was managed in succession by three short term missionaries of the American Board of Trustees.

During his tenure, Mr. Niles sought zealously to keep before him the objectives of the Institute as a Training Centre for middle grade agriculturalists who would benefit by the short term course either to seek employment or engage themselves in fruitful self – employment enterprises.

With rumblings louder each year since his assumption of an impending 'crisis' in the country, he faithfully discharged his duties and kept the Institute running on an even keel.

Mr. Niles was a churchman whose talents in western music (vocal) was availed of, by the church at all important church services, particularly during Lent and Christmas.

Jebam, as he was known in his family circle, was an old boy of Jaffna Central and had the stamp on him of a good Christian training imparted to him by his father Mr. W. D. Niles, former District Judge, Jaffna, an ardent Methodist and by his brother Dr. D. T. Niles, ecumenical leader of world stature.

The funeral took place in Toronto on the 14th of November. He leaves behind his wife Esmy (nee Chinniah, Proctor, S. C. of Uduvil) his daughter, Thelma Williams, Attorney-at-law, his son Elmo and a brother and sister, Marcus Niles (U. K.) and Bimla Sharma (Madras). His two sisters-Mangalam Thambiah and Ranee Ratnasingam predeceased him in recent years.

## LTTE SOLE REPRESNTATIVES OF TAMILS IN THE NORTH & EAST SAYS THONDAMAN

Mr. S. Thondaman, minister in the U. N. P. government and leader of the upcountry Tamil community, recently expressed his opinion that if the government is to enter into any meaningful dialogue with the Tamil people with a view to permanent settlement, it should speak with the L. T. T. E. who alone could speak for the Tamil people in the North and East.

He also confirmed as his opininion that both within the Government and among the opposition, there is a growing conviction that a negotiated settlement is the only solution for the present ethnic crisis.

## OBITUARY

### George Thurairatnam Everts

Mr. G. T. Everts retired Public Health Inspactor and member of the C.S.I. Church Chavakachcheri passed away on Wednesday the 5th December. The funeral service was conducted at his residence at Chavakachcheri on Thnrsday the 6th December at 4.00 p. m.

Mr. Everts leaves behind besides his wife Annaluxmy, his daughters Thevakumari, Chandravathana, Nalini and Chitrani and his son Anandarajan. One of his sons Kavirajan died a few years ago.

Mr. Everts was the father in Law of Mr. J. Thevananthan of the Jaffna College Technical Institute.

## OBITUARY

### George Arudpragsam

Mr. George Arudpragasam of the staff of Velayutham Maha-Vidyalayam, Point Pedro died as a result of Aerial Bombing on Thursday the 6th December. According to reports Mr. Arudpragasam was teaching in his class when the bombers were hovering over Point Pedro. He ran to the road for safety and was killed as the bomb fell near him.

Mr. George Arudprgasam was the son of Mr. & Mrs. J. Arudpragasam of Chavakachcheri. He married Lydia Gnanasothy daughter of the late Mr. & Mrs. Muttaiah of Katkovalam and teacher M. G. H. S. Point Pedro The funeral took place on Friday the 7th Deember at 2 00 p.m at Point Pedro.

## APPRECIATION

**Dr. SUPRAMANIAM JEYASEELAN** passed away peacefully in Adelaide, Australia, on 29th November 1989, after a brief illness, bravely borne. Hailing from a respected christian family from the North of Sri Lanka, "Seelan" in his native land and "Jay" in his adopted home, had his secondary education at Jaffna College where he was English Editor of the student Magazine - The Young Idea, President of the Literary Association - the Academy, and a School Counsellor; he was also closely associated with several christian associations and activities. During his school days he was full of life and clean fun and always won the respect and affection of histeachers and colleagues alike. Naturally gifted, he enjoyed turning his talents to wide and varied interests in life and always excelled in any of his pursuits. As a student, it was his gifted intellect rather than industry that assured him a place in the medical faculty of the University of Sri Lanka, Peradeniya, in Kandy.

He qualified in 1969 as a medical practitioner, married Padmini in 1970 and migrated to Australia in 1974. He served initially in Alice Springs, then in Adelaide and Tasmania. Finally, he entered private practice as a Specialist Anaesthetist in Adelaide, where he remained until his untimely death. Deepa, his daughter, is already follow ing in her father's footsteps and Sam, his son, would probably do so in due course.

Unassuming, yet always lively, with malice towards none, charity to all, he was truly affectionate and concerned about all around him. His charm and fun were contagious - a ready wit, a permanent smile and a blend of diverse gifts and talents combined in this one wonderful person, makes it hard to believe that all we are left with now are memories; memories pleasant of a wonderful friend with fine qualities of head and heart, of a caring and affectionate husband and father and memories painful that death should cruelly rob him from his near and dear ones in this untimely manner.

It is perhaps some consolation to Padmini. Deepa, Sam, his brothers and sister, that their personal tragedy is shared by all who were fortunate to have been associated with him during his life. Seelan leaves behind an indelible memory in all of us - a memory encrusted with sublime and pleasing thoughts of an exemplary life led by example. In the words of the Bard of Avon he was gentle and the elements so mixed in him that nature might stand up and say to all "this was a man".

C. Chakradaran

## MOVING WITH CHRIST INTO GOD'S TOMORROW

The National Christian Council of India has organised a five days conference for church leaders in that country at the end of February and early March in 1991 to consider the challenges and opportunities for the Church in India as it moves into the 21st century. Outstanding leaders from many parts of the world will participate at this conference. There will also be a day of special celebration and witness in New Delhi. The new General Secretary of the N. C. C. of India The Rev. Dr. Lung Muana is organising the conference.

## M. M. Thomas – Governor of Nagaland Institute

Dr. M. M. Thomas, well known Theologian and Scholar is now serving as the Governor of the North Eastern Hill State of Nagaland.

## VADDUKODDAI CHRISTMAS CAROL SERVICE

★ Robert Porter ★

This year, when we have sorely missed the seasonal preparations of the Christian colleges for the All - School Christmas Carol Service, we are humbly thankful for the efforts of Mrs. Vimala Jebanesan in training the older boys and girls of Jaffna College for their Advent offering, "A Mystery for Christmas," held on a rainy Sunday evening, Novembr 25, at the Vaddukoddai Cathedral Church.

Combined with the traditional tableau, prepared under the direction of Miss S. Selvadurai, it was a simple service of Christmas carols. After the choir processed to the stately rhythms of "Once in Royal David's City," the congregation's attention was directed to the expectation of the Birth with the Besancon tune, "Peoples Look East!"

Some unfamiliar as well as some familiar carols then formed the hour's program -- rather haunting, the tune "We shepherds Watch Were Keeping;" happy and joyful the sixteenth-century French melody "Ding Doug! Merrily on High!"

The candles held by the beautiful angels of the tableau lent the occasion the intimate warmth and radiance of the Gospel narrative. The Sussex Carol gave the improved men's section a chance to shine while the girls provided the obligato. My favorite piece of the evening was another lovely minor French tune of the sixteenth century, called simply "The Huron Carol." It set the mood of cool moonlit wintertime in the fields, where hunters come to worship Jesus with fox and beaver pelts.

We were immediately thereupon whirled away to other lonely plains in the Far West of the U. S. A. through the "Cowboy Carol" and the horseman's cheerful hope of a "new world beginning from tonight."

Centering on Mary, this year portrayed by Geethanjeli Jebanesan, the choir sang a setting of the Magnificat, arranged in 1962 to a Maluku popular tune (from the Moluccas, Indonesian islands that have also suffered ethnic violence). A moment of humour occurred when one of our otherwise garrulous Littlest Angels who were to come up and bless the Baby refused to go on stage.

A Polish hymn celebrating the "Infant Holy, Infant Lowly" quietly concentrated our attention again on the sleeping Child. This was followed by the ringing news bulletin, "Masters in This Hall / Hear ye

(Continued on page 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை

UTHAYA THARAKAI

Estd. 1841.

மலர் 150 14 - 12 - 90 இதழ் 26


## வருகையின் காலம் நான்காம் ஞாயிறு *23. 12. 1990.*

ஏசாயா *11*:1-9, 1 கொரி *1:26 – 31*, லூக்கா 1:26 – *38*

காபிரியேல் தூதனுக்கூடாக மரியாளுக்கு அறிவிக்கப்பட்ட பெரும் செய்தியையின்று நினைவு கூருகிறோம். "கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்...... இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" லூக்கா *1:28, 31.* மரியாளுக்கு அறிவிக்கப்பட்ட செய்தி கடவுளுடைய பூர்வ ஒழுங்குக்கு அமைய ஏற்பட இருக்கும் ஒரு சம்பவம் என்பதையே ஏசாயா தீர்க்கதரிசியின் நூல் *11*-ம் அதிகாரம் நமக்கு நினைவூட்டுகிறது. "அவருடைய இராச்சியத்திற்கு முடிவிராது" (லூக்கா *1:33*) என்ற நம்பிக்கையின் செய்தியைக் குறித்தே ஏசாயா அழகாக விவரிக்கிறார். உலகத்தின் இராச்சியங்களில் அநீதியும் அஞ்ஞானமும் நிறைந்திருக்கின்றன. அநீதியான சக்திகளைக் கொண்டே உலகத்தின் இராச்சியங்களை ஆளுபவர்கள் தங்கள் ஆட்சியை நிலைநாட்டுவார்கள். மாறாக முடிவிராத இராச்சியத்தை ஸ்தாபிக்க வருபவருக்கு "நீதி அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக் கச்சையுமாயிருக்கும்" (ஏசா *11:5*). ஓனாய், புலி, பாலசிங்கம், கரடி போன்ற மிருக சுபாவமும், மிருக முறைகளுமே உலக இராச்சியங்களின் முறைகளாய்த் திகழ்கின்றன. பயங்கரமான அடக்கு முறைகளைக் கொண்டே விலங்குமுறை ஆட்சி இயங்குகின்றது. பிறர் நலனை அழித்தும் இன்னும் பிறரை ஒழித்துமே வாழும் முறையே மனித சமூகத்தின் முறையாகவும் இருக்கின்றது. பெலனுள்ளோர் பெலன் குறைந்தவர்களை நசுக்கி, உள்ளவர்கள் இல்லாதவர்களை ஒடுக்குவதே உலக சமூகத்தில் நாம் காணும் காட்சி மாறாக கடவுளின் ஒழுங்கு நிறைவேறி அவருடைய முடிவற்ற இராச்சியம் நிறைவேறும் பொழுது "நீதியின் படி ஏழைகளை நியாயம் விசாரித்து, பதார்த்தத்தின் படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்தும்" ஓர் புதிய ஒழுங்கு நிலைநாட்டப்படும். அப்பொழுது பகை, விரோதம், போட்டி நீங்கி ஓனாயும் ஆட்டுக்குட்டியும், புலியும் வெள்ளாட்டுக் குட்டியும், பாலசிங்கமும் கன்றுக்குட்டியும் ஒருமித்திருக்கும், கரடியும் பசுவும் கூடிமேயும். அடக்கி ஒடுக்குபவர்களின் விலங்கியல்பு மாறி அன்பின் சிந்தை அவர்களில் தோன்றும், அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரின் பயம். பீதி, அடிமைத்தனம் மாறி துணிவும் சம நிலையும் ஏற்படும். புதிய மானிடத்தின் சம்பந்தம் இனி அன்பின் சம்பந்தமே, ஓர் சமத்துவ சம்பந்தம் எவரினதும் மானிடத்தன்மை மதிக்கப்படும் சம்பந்தம். அப்பொழுது "பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசா *11:9*).

மேற் கூறிய புதிய மானிட நிலையை நிலை நாட்டுபவரைக் குறித்தே காபிரியேல் தூதன் மரியாளுக்கு மங்கள வாக்கை அறிவித்தான். மரியாள் அவ் வாழ்த்தைக் கேட்டுக் கலங்கி, இந்த வாழ்த்து எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள் (லூக்கா *1:29*) "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை', (லூக். *1:37*) என்ற உறுதி வாக்கைக் கேட்ட பிறகு மரியாளின் மறுமொழி ஒன்றே. "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உமது வார்த்தையின் படி எனக்கு ஆகக் கடவது" (லூக்கா *1:38*).

கடவுளின் அன்பின் சித்தமே உலகத்தைப் படைத்தது. அவரின் அன்பின் சித்தமே மக்கள் "தனிமையாயிருப்பது நல்லதல்ல" (ஆதி *2:18*) என்று மக்களை சமூக வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாய்ப் படைத்தது. அவ் அன்பே சமூக வாழ்க்கையின் இயல்பாகவும், சக்தியாகவும் திகழ வேண்டுமென்பது படைத்தவரின் சித்தம். இதற்கு மாறாக புரட்சி பண்ணின. மனிதனின் வரலாறு மானிடம் சீர் குலையும் வரலாறு, பாபேல் கோபுரப் பிரிவுகளின் வரலாறு, முரண்பாடுகள், சண்டைகள், யுத்தங்களின் வரலாறாக மாற்றப்பட்டது காபிரியேல் மரியாளுக்குக் கூறிய வாழ்த்து, ஒரு மங்கள வாழ்த்தாக இருப்பதன் காரணம் பிறக்க இருக்கும் குழந்தை "இயேசு" என்ற பெயர் தரித்தவராக அதாவது அவரே "தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்". (மத் *1:21*) மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர் மனிதனாயிருப்பது எப்படி? எனவே மரியாளின் கேள்விக்கு இடமுண்டு, "இது எப்படியாகும்?" (லூக் *1:34*) புருஷனை அறியாதிருந்தும் ஒரு குமாரனைப் பெறுவாய் என்ற வாழ்த்து எப்படிப்பட்டதோ என்று மரியாள் சிந்தித்தது போல், மரியாளின் பிள்ளையாயிருந்தும் "இயேசு" என்ற பெயருக்கு உரியவராக "ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவராய்" அவர் இருப்பது எப்படி "இது எப்படியாகும்?". தூதனின் மறுமொழி, 'உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது கடவுளுடைய குமாரன் எனப்படும்" (லூக் *1:35*) இதுவே தூதனின் மங்கள வாழ்த்தின் தாற்பரியம். கன்னியின் உற்பவிப்பும் பிறப்பும், கடவுளின் இரட்சிப்பு சரித்திரத்திலிருந்து தோன்றிய ஓர் சம்பவமல்ல. சரித்திரத்திற்குள் வந்த ஓர் சம்பவமே. இறையியல் மேதை ஜே. எஸ். வேல் (J. S. Whale) கடவுளுடைய குமாரன். "வரலாற்றிற்குள் வந்தார், சும்மா வரலாற்றிலிருந்து தோன்றினது மாத்திரமல்ல" என்பதையே கன்னிப் பிறப்பு குறிக்கிறது என்று விளக்கம் கூறினார். "இது எப்படியாகும்?". "கடவுளால் கூடாத காரியம் ஒன்றுமில்லை", எனினும் ஒரு கன்னியின் இணக்க ஒப்புதலுக் கூடாகவே கடவுள் பராக்கிரமம் செய்தார். (லூக் *1:51*).

## சுருக்க ஜெபம்

ஆண்டவரே, உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மனுஷ அவதாரத்தைத் தேவ தூதனுடைய வாக்கினால் அறிந்து கொண்ட நாங்கள் அவருடைய சிலுவையினாலும் பாடுகளினாலும் அவருடைய மகிமையான உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகும் படி, எங்கள் இருதயங்களில் உம்முடைய கிருபையைப் பொழிந்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

"திருமறைத் தொண்டன்"

## நத்தார் செய்தி

### 'கடவுள் நம்மோடிருக்கிறார்' 25-12-90

ஏசாயா 9:2, 6:7, தீத்து *2:11-14; 3:3-7*; லூக்கா *2:1-14*

"கடவுள் நம்மோடு இருக்கிறார்" என்பதை இயேசுவின் பிறப்பின் கதைகள் வற்புறுத்துகின்றன. இச் சிந்தனை மனித கற்பனையில் தோன்றிய எண்ணமல்ல அல்லது நடைமுறையிலல்லாத இறையியல் சத்தியமுமல்ல. "வார்த்தை மாம்சமாகி நம்மத்தியிலே வாசம் செய்தார்" என்று புனித யோவான் தமது நற்செய்தி நூலில் (யோ *1:1-14*) குறிப்பிடும் போது இது உண்மையாக நடைபெற்றது எனக் கூறுகின்றார். ஆனால் புனித லூக்காவும் மத்தேயும் இச்சம்பவம் ஓர் குறிப்பிட்ட காலத்திலே ஓர் குறிப்பிட்ட இடத்திலே ஓர் குறிப்பிட்ட தாயின் வயிற்றில் நடைபெற்றது எனக் கூறுகின்றார். "ஏரோது அரசன் காலத்தில்" "சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாக இருந்த பொழுது" "பெத்லகேமில் உள்ள மரியாளிடத்தில்" எனக் கூறுகிறார். இவ்வார்த்தைகள் இவ்வுலகத்திலே கடவுளின் வருகையும் அவரின் பிரசன்னமும் ஓர் "ஆவிக்குரிய அனுபவம்" மாத்திரமல்ல அல்லது எங்கள் "உள்ளங்களுக்கு சமீபமாக இருக்கிறார்" என்ற "உணர்வு" மாத்திரமல்ல. அது நடை பெற்றது என்பதை வற்புறுத்துகின்றன. அவர் பலஸ்தீனா தேசத்தில் பிறந்தார். புவியியல் மக்கள் தொகை பதிவு செய்யப்பட்ட போது பிறந்தார். புரட்சி ஏற்படும் ஆபத்து நிலவிய போது பிறந்தார் அரசியல் அவர் அடிமையின் ரூபம் எடுத்துப் பிறந்தார், மாட்டுத் தொழுவத்தில் வந்துதித்தார், ஏழைகளுக்கு உதவி செய்ய வந்தார், பொருளாதாரம் எனவே கடவுள் இவ்வுலகத்தில் வந்தார், மக்கள் மத்தியில் வாசம் செய்தார் என்று கூறும் போது அது ஒரு சாதாரண சமயக் கோட்பாடோ அல்லது எண்ணமோ அல்ல அது வரலாற்றில் நடைபெற்ற சம்பவங்கள். இச் சம்பவங்களைப் பற்றிப் பேசும் போது நாம் அரசியல் பற்றியும், பொருளாதாரம் பற்றியும், வரலாறு பற்றியும் பேசுகின்றோம்.

நாம் வாழும் இவ்வுலகத்திலேயே கடவுள் வந்தார். அரசியல் குழப்பம், அநீதி, வறுமை, விரக்தி வெறுப்பு, பொறாமை, பயம் நிறைந்த இவ்வுலகத்திலே அமைதி, சமாதானம், நீதி, நல்லெண்ணம், அன்பு நிலவ வேண்டுமென மக்கள் எதிர்பார்த்த காலத்திலே அவர் வந்தார். வல்லரசுகளின் கால் தூசி எனக் கருதப்படும் பெத்லகேமில் பிறந்தார். அடிமை நிலையிலிருந்து மீட்பை எதிர்பார்த்த சிறுபான்மை இனத்தவரின் மத்தியில் வந்து தோன்றினார். அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலே தமது சனமாகிய இஸ்ரவேலரின் உபத்திரவங்களைப் பார்த்து, கேட்டு, அறிந்து அவர்களை விடுவிப்பதற்காக பாழைய மிறங்கியது போல (யாத் 3) தம்மையே நம்பி வாழும் மக்களின் உபத்திரவங்களைப் பார்த்து அவர்களின் கூக்குரலைக் கேட்டு அவர்களை விடுவிக்க வருகிறார்.

இயேசு இவ்வுலகத்தில் வரும் பொழுது "ஒளி இருளில் பிரகாசிக்கிறது" என யோவான் கூறுகின்றார். அந்த இருள் என்ன என்பது பற்றி மத்தேயுவும் லூக்காவும் கூறுகிறார்கள். நமது உலகத்தை சூழ உள்ள அதே இருள் அன்றும் நிலவியது. "வார்த்தை மாம்சமாகி நம்மத்தியிலே வாசம் செய்தார்" என பரியோவான் கூறுகின்றார். இப் பிரபஞ்சத்தை சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள அதே கடவுள் மாமசத்தையும் இரத்தத்தையும் உடையவராகி இவ்வுலகத்திற்கு வந்தார். இச்சம்பவங்கள் நத்தார் நாடகங்களில் அல்லது பிரசங்கங்களில் மாத்திரம் நடைபெறும் சம்பவங்களல்ல. இவை சபைக்கு வெளியே உலகத்தில் நடைபெற்ற சம்பவங்கள்.

அவரின் அற்புதமான பிறப்பு அவர் யார்? என்பது பற்றியும் எங்கிருந்து வந்தார் என்பது பற்றியும் எடுத்துக் காட்டுகின்றது. அவரின் நாமம் 'இயேசு' ஏபிரேய மொழியில் 'கடவுள் உதவி செய்கிறார்' அல்லது "கடவுள் இரட்சிக்கிறார்" எனப் பொருள்படும் (மத் *1:21*) அவர் 'இம்மானுவேல்' என அழைக்கப்பட்டார். கடவுள் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாகும் (மத் *1:23*). அவர் 'கிறிஸ்து' என அழைக்கப்பட்டார் 'மேசியா' கடவுளால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என அர்த்தமாகும். அவர் கடவுளால் அனுப்பப்பட்டவர். அவர் 'கடவுளின் குமாரன்" என அழைக்கப்பட்டார்.

புராதன அரசர்களும் கடவுளின் குமாரர் என அழைக்கப்பட்டனர். ஏனெனில் அவர்களின் அதிகாரமும் வல்லமையும் மகிமையும் கடவுளின் புத்திரர் என எடுத்துக் காட்டியது. சிலர் தம்மை இரட்சகர் என்றும் தெய்வீக வல்லமை படைத்தவர் என்றும் கூறினர். இயேசுவை கடவுளின் குமாரன் என்று கூறும் பொழுது அவரில் காணப்பட்ட ஒப்பற்ற தன்மை அவருடைய வல்லமை அல்ல அவரது பெலவீனம் அவருடைய மகிமையல்ல அவருடைய பாடுகள் அவரின் அதிகாரம் அல்ல அவருடைய

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாரகை ஒளி

''பேதைகளின் தவறுகள் அவர்களையே கொன்றுவிடும்;
சிறுமதியோரின் தற்பெருமை அவர்களை அழித்துவிடும்''.
— நீதிமொழிகள், 1:32

# எங்கள் கருத்து

## ஆண்டவர் நல்லவர்

இன்று நமது சூழலில் நடை பெறும் பயங்கரமான சம்பவங்கள், கலவரங்கள் அனைத்தையும் கவனிக்கும் போது, ''ஆண்டவர் நல்லவர்'' என்று சொல்வது எப்படி? நாம் நாள் தோறும் அனுபவிக்கும் வேதனைகள் இதற்கு முரண்பாடாயிருக்கிறதல்லவா? என நாம் வினவலாம்.

'ஆண்டவர் நல்லவர்' என்றால் நமது நாட்டில் ஏன் சீர்கேடான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன? இனக் கலவரங்களின் விளைவாக இலட்சக்கணக்கான மக்கள், வீடுகளை இழந்து, அன்பானவர்களை இழந்து, அகதிகளாக இடம் பெயர்ந்து அல்லற் படுகின்றனரே! ஏன்? 'ஆண்டவர் நல்லவர்' என்றால், பெருந்தொகையான தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றனரே! ஏன்? உலகின் பல நாடுகளில், குறிப்பாக மூன்றாவது உலகில் பல மக்கள் பட்டினியினால் வாடுகின்றனர். பல குழந்தைகள் அநாதைகளாக்கப்படுகின்றனர். ஏழை எளியவர்கள் ஈன இரக்கமின்றி அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் - ஏன்?

இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள், கடந்த முப்பது ஆண்டுகட்கு மேலாக, மனித உரிமைகள் மறுக்கப்பட்டு பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாகக் கடந்த பத்து ஆண்டுகளாக சகிக்க முடியாத வேதனைகளை அடைந்து வருகின்றனர். துன்பங்கள் குறையவேயில்லை. இவ்விதமான சூழ்நிலையில் இருப்போர், 'ஆண்டவர் நல்லவர், என எப்படிக் கூற முடியும்? அவர் துன்பத்தைக் கண்டு இரங்காதவரா? தீமையை அகற்றும் ஆற்றல் அற்றவரா? அவர் வல்லமை யற்றவரெனின் அவர் ஆண்டவராய் இருக்க முடியாதே! அப்படியானால் 'ஆண்டவர் இல்லை' என்று தானே பொருள்படும், என்பது ஒரு சாரரின் கருத்தாகும்.

இந்த இக்கட்டான நிலையில் விசுவாசிகள் கூட தடுமாறுகின்றனர். ஆண்டவர் தாம் நல்லவர் என்பதை ஏன் வெளிப்படையாகக் காட்டாதிருக்கிறார்? - ''யாராவது நலமானதை எங்களுக்கு அருளமாட்டாரா?'' என்று பலர் கேட்கின்றனர்; ஆண்டவரே, எங்கள் மீது உமது முகத்தின் ஒளி வீசும்படி செய்தருளும்'' —(சங். 4:6)

இக்கருத்தை மனதிற் கொண்டு, இவ்வாண்டைத் திரும்பிப் பாருங்கள். இவ்வாண்டில், நாம் எதிர்பார்த்ததற்கு மாறாகப் பல துன்பங்கள் நம்மைத் தாக்கிய போதிலும், ஆண்டவர் ஒரு நன்மையையும் செய்யவில்லையா? துயர் நிறைந்த இருளுக்குள் தத்தளித்த போது, அவரின் ஒளியை நாம் பெறவில்லையா? சிந்தித்துப் பாருங்கள்! அப்பொழுது, ''என் ஆத்துமாவே, ஆண்டவரைப் போற்று; அவர் செய்த நன்மைகளுள் ஒன்றையும் மறவாதே'' (சங். 103:2) என்று தான் மன நிறைவோடு சொல்லத் தூண்டப்படுவீர்கள். ஒரு முறை சங்கீதகாரன், தன் சொந்த ஜனத்தின் பழைய வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்து — ''விவேகமுள்ள யாவரும் இவற்றை எண்ணிப் பார்ப்பார்களாக; ஆண்வரின் பேரருள் செய்தவற்றை உணர்ந்து கொள்வார்களாக'' (சங். 107:43) என்று கூற முடிந்தது.

இன்றைய உலகில் நடைபெறும் காரியங்களை ஆராயும் போது, ஒரு ஞானமுள்ள மனிதன், 'நல்ல ஆண்டவரையே' காண்கிறான். அவர் கடின இதயமுள்ளவரல்ல, மன இரக்கமும் உருக்கமும் உடைய அன்புள்ள ஆண்டவர் என்பதையே காண்கிறான். இன்று நாம் காணும், அனுபவிக்கும் எல்லாக் காரியங்களும் அவரின் அன்பின் ஊற்றிலிருந்து வருகிறதென்ற உண்மையை நாம் காணலாம். அவர் ஜீவ ஒளியின் தந்தை. அவரிடமிருந்து தான் எல்லா நன்மையான காரியங்களும் வருகின்றன.

நமக்கு வேண்டிய பாதுகாப்புத் தரப்படுகிறது. ஆபத்து அணுகாமல் நம்மைக் காத்து வருகிறார். குடும்பத்திற்கு வேண்டியனவற்றை அன்புடன் அளித்து வருகிறார். கடவுள் நமக்கு அருளும் ஆசீர்வாதங்களை ஒவ்வொன்றாக நினைக்கும்போது, 'ஆண்டவர் நல்லவர்' என்று தான் நாம் கூறுவோம்! ஆனால், அடுத்தடுத்துத் துன்பம் வரும்போது, வருமானம் குறையும் போது, குடும்பத்தில் கஷ்டங்கள் ஏற்படும் போது, சமாதானம் இல்லாத போது, நண்பர்கள் நம்மைக் கைவிடும் போது, அயலார் நம்மை விரோதிக்கும் போது, 'ஆண்டவர் நல்லவர்' என்று நம்மால் சொல்ல முடியுமா? உண்மையான விசுவாசியினால் முடியும்.

பல தடவைகளில் நாம் எதிர்பாராத வகையில் கடவுள் நமக்கு நல்ல காரியங்களைச் செய்து வருகிறார். துன்ப துயரத்தால் தள்ளாடி நொந்து இருந்த வேளைகளில் அவர் எங்களைத் தாங்கி வழி நடத்தினார். ஆண்டவரின் அருளுக்கு முடிவில்லை. 'அவரை நேசிப்போர்க்கு விடுதலை அளிக்கிறார், பாதுகாப்பை அருளுகிறார். அவர் தம்மை நோக்கி மன்றாடுவோர்க்கு செவிசாய்த்து. அவர்களோடிருந்து அவர்களைத் தப்புவிப்பார்' (சங். 91:14, 15). இந்த விசுவாசத்தில் உறுதியாய் நிலை நிற்பவர்கள், துன்பத்தின் மத்தியிலும் 'ஆண்டவர் நல்லவர்' என்று தான் சொல்லுவார்கள்.

ஆம், ஆண்டவர் நல்லவர். அடிமைகளாக ஒடுக்கி அடக்கப்பட்ட மக்களுக்கு விடுதலை அளிக்க வந்துதித்த எம்பெருமான் பிறந்த செய்தி - 'மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி' அவரே ஆண்டவராகிய கிறிஸ்து. 'உன்னதங்களில் கடவுளுக்கு மகிமை. உலகிலே அவர் தயவு பெற்றோர்க்கு அமைதி'. (லூக். 2:11,14). நம்முடன் என்றென்றும் இருக்க இப்பூவுலகிற்கு வந்த 'இம்மானுவேல்' இவரே நம்மைப் பாவத்திலிருந்து மீட்க வந்துள்ளார். நமக்காகப் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தார். இன்றும் நமக்காகச் செயலாற்றி வருகிறார். அவரின் அன்பின் கரங்கள் நம் அருகில் இருக்கின்றன. 'கடவுள் நம் சார்பில் இருக்கும் போது, நம்மை எதிர்த்து நிற்பவர் யார்?'

'கிறிஸ்மஸ்' விழாவைக் கொண்டாடும் நாம், பலவிதமான துன்பங்கள் மத்தியில் தத்தளிக்கும் தமிழ் மக்களுக்கு, 'ஆண்டவர் நல்லவர்' என்ற நற்செய்தியை வெறும் சொற்களினால் அறிவியாமல், செயலினால் காட்ட வேண்டும். நற்செய்தி நவிலும் விழா தான் நத்தார் திருவிழா!!

''ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; அவர் நல்லவர்''

### கடிதம் - 1.

அன்புத் தம்பி !

பல நாட்களுக்குப் பின் உனக்குக் கடிதம் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. மகிழ்ச்சி ! இப்பகுதியில் நடை பெறும் துன்பங்கள், கலவரங்கள் பற்றி எழுதும்படி கேட்டாய். அதனை விபரமாக வேறொரு கடிதத்தில் எழுதுவேன். இருந்தும், ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன் தமிழரின் சுதந்திரத்திற்காக, தந்தை செல்வா நடத்திய சாத்துவிகப் போராட்ட காலத்தின்பின், இப்பொழுதுதான் வட–கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள், அளவில்லாத் துன்பங்கள் அடைந்த போதிலும், ஒன்று திரண்டு சுதந்திரப் போராட்டத்தில் கலந்து வருவதாகத் தெரிகிறது? ''தமிழன் என்று சொல்லடா, தலை நிமுர்ந்து நில்லடா'' என்றார் ஒரு புரட்சிக் கவிஞன். எல்லோரும் ஒத்துழைத்தால், அந்த நிலை உருவாகும் என்பது நிச்சயம். இன்று சுதந்திரப் போராட்டத்தை நடத்திவரும் போராளிகள், தமிழ்ப் பகுதிகளின் எல்லைகளைப் பிடிப்பது மட்டுமல்ல, தமிழ்ச் சமுதாயத்தையே புதிதாக அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாவீரர் நினைவு வாரத்தில் நடைபெற்ற கண்காட்சியில் இது தென்பட்டது. இது நிறைவேற மற்றவர்களின் ஒத்துழைப்புத் தேவை

இப்போராட்டத்தின் விளைவுகளை இங்கு விவரிக்க முடியாது. நல்ல அறிவும், திடமனதும், தமிழ் மண்ணைக் காக்க வேண்டுமென்ற ஆர்வமும், உயர்ந்த இலட்சியமும் நிறைந்த பல தமிழ் இளைஞரும் யுவதிகளும் இச்சுதந்திரப் போராட்டத்தில் தமது உயிரைத் தியாகஞ் செய்து வருகின்றனர். அவர்கள் சிந்தும் இரத்தம் தமிழர்களின் வீர உணர்வுகளைத் தட்டி எழுப்புகின்றது; இருந்தும், பயங்கர இருள் எங்கும் சூழ்ந்திருக்கின்றது. தமது பாதுகாப்பைக் கருதி கொழும்பு ஓடுகின்றனர் சிலர். தென்பகுதி பல்கலைக் கழகத்தை நாடுகின்றனர் சில மாணவர். தமது எதிர்காலத்தை நோக்கி வெளிநாடுகளுக்கு போகின்றனர் பலர். வெளிநாடுகளில் ஏற்கனவே குடிகொண்டுள்ள தமிழர்களில் சிலர் சுதந்திரப் போராட்டத்திற்குத் தங்கள் பங்கை அளித்து வருவதாக அறிகிறோம். எங்கிருந்தாலும் ஈழத் தமிழினம் கூடிய விரைவில் ஒன்று சேரவேண்டும். இதுவே எமது விருப்பம்.

இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற போது, அங்கிருந்த கிறிஸ்தவர்கள் அதில் ஈடுபடவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப் பயந்து ஒதுங்கியிருந்தனர். ஒரு சிலர் மட்டும் முன்னின்று, ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் குரல் எழுப்பினர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அப்படியிருக்கவில்லை. தமிழர் நடத்தி வந்த சுதந்திரப் போராட்டத்தில் சாத்துவிக முறையில் ஆதிதொட்டு தமிழ் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டு வந்தனர். இதற்குத் தந்தை செல்வாவே தக்க சான்றாகும். சமீப காலத்தில் வட - கிழக்கு மாகாணத்தில் உள்ள றோமன் கத்தோலிக்க சபை, பல இடறல்கள் துன்பங்கள் வந்தபோதிலும் தளராது ஈடுபட்டு வந்தது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூசிகள்

—பொன்னு. ஆ. சத்தியசாட்சி—

இறைவனே,
நீ அமர்தற்கு
நான் ஒரு மணையாக வருகிறேன்;
நீ மீட்டுவதற்கு
நான் ஒரு வீணையாக வருகிறேன்;
நீ ஊதுவதற்கு
நான் ஒரு குழலாக வருகிறேன்;
ஏற்றுக் கொள்வாயா?

நின் திருவடித் தூசிகளைத் தட்டி விடுவதற்கு உதவும்
ஒரு மிதிபாயாகக் கிடக்க ஆசைப்படுகிறேன்.
ஆசை நிறைவேறுமா?

ஆ! கெடுக என் சிந்தை!
உளறிக் கொட்டிவிட்டேன்!
இது உளுத்துப்போன பலகை,
எப்படி மனையாகும்?
இந்த வீணையில் நரம்புகள் இல்லை.
எப்படி மீட்டுவாய்?
இந்தக் குழலில் நாதமே எழுவதில்லை,
உடைந்து போய்க் கிடக்கிறது,
எப்படி ஊதுவாய்?

காலைத் துடைப்பதற்கான
மிதியாயும் உனக்குத் தேவையில்லை
நின திருவடிகளில் தூசியே படிவதில்லையே!

அட செல்வனே, மைந்தனே, கேளடா!
உன் தகுதியை நம்பியா
நான் செயலாற்ற வேண்டும்?
என் விரல்களால் உன்னைத் தொடுவேன்;
உளுத்த பலகை உயர்ந்த அரியணையாகும்!
ஓ! நரம்பில்லாமல் நலியும் வீணையே!
என்னுடைய - நம்பிக்கை வங்கியிலே
ஏழிசை நரம்புகள் ஏராளம் உண்டு;
கேள், கொண்டு வருகிறேன்
இசை மீட்டுகிறேன்.
ஓ! உடைந்த புல்லாங்குழலே!
உன் வழி தேனிசை ஊரெல்லாம் பயந்திட
யானே நாத வடிவாக வருவேன்!

மைந்தனே! ஓ என் நண்பனே!
என் பாதங்களில் தூசி படியவில்லையா?

மாநகர நெடுஞ்சாலைகளுக்கும் சாக்கடைகளுக்கும்
இடையே உள்ள இடுக்குகளில்
கட்டப்பட்டுள்ள குடிசைகளுக்கு
நான் போவதும் வருவதுமாயிருக்கிறேன்.
அவர்கள் என் நண்பர்கள் - என் வாரிசுகள்
ஆம் என் வாரிசுகள்
சாக்கடை வாழ்க்கை எனக்குப் புதிதன்று.
மனிதர்கள் என் பெயரில் கட்டுகிற கோயில்களுக்கும்
அவர்களுடைய சிந்தையிலும் சமுதாயத்திலும்
பாய்கிற சாக்கடைகளுக்கும் இடையே
குடிசை போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன் நான்!
சேற்றை அள்ளி அள்ளிப் போடுகிறேன் - மாறவில்லை.
கோயில்களின் இரைச்சலும் ஓயவில்லை.

என் பாதங்களில் சேறு ஒட்டிக் கொண்டிருக்கிறது
என் பாதங்களில் தூசிகள் படிந்திருக்கின்றன.

நீ எனக்கு மிதிபாயாக அன்று.
என்னுடன் சேர்ந்து
நெடுஞ்சாலைச் சேற்றையும்
நெஞ்சத்துச் சேற்றையும்
அள்ளிக் கொட்டுவதற்குத் தோழனாக வருகிறாயா?
அங்கே உன்னை வீணையாக மீட்டுவேன்
அங்கே உன்னைக் குழலாக ஊதுவேன்!

என் பாதங்களில் சேறு ஒட்டிக் கொண்டிருக்கிறது
என் பாதங்களில் தூசிகள் படிந்திருக்கின்றன .....!

## இறையியல் கல்விப் பயிற்சி (D. R. A)

(முற்றொடர்)

இறையியல் கல்விப் பயிற்சியைப் பற்றி நாம் சிந்திக்கும் போது, இப்பயிற்சியின் நோக்கமென்ன என்பதை நாம் அறிவது முக்கியம். இப்பயிற்சி, இருக்கின்ற பாரம்பரியச் சபை அமைப்புக்களைச் சிதறி விடாமல் அவற்றைக் கட்டிக் காப்பதா? சபைகள் விரும்புவது போல குருமார்களை உருவாக்கிக் கொடுப்பதா? அல்லது திருச்சபை தான் இன்று வைக்கப்பட்டுள்ள சூழலில் எழும் தேவைகளைச் சந்திக்கத் தூங்கிக் கிடப்பனவும், சுயநல ஈடுபாடுகளில் மயங்கிக் கிடப்பனவுமான சபைகளைத் தட்டி எழுப்புவதா? - இத்தகைய இறை மக்களைத் தட்டி எழுப்பவும், அம்மக்களோடு சேர்ந்து, உலகின் இன்றைய தேவைகளை அறியவும், அங்கு ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் கிறிஸ்துவோடு சேர்ந்து செயல்படவும் குருத்துவ மாணவர்களைப் பயிற்றுவிப்பது நமது கடமை அல்லவா? சிந்தித்துப் பாருங்கள்.

இறையியல் பயிற்சி பாரம்பரிய அமைப்புக்களைக் கட்டிக் காக்கவும், சமயச் சடங்குகளை நிறைவேற்றவும் தனிப்பட்ட நபர்களுக்கு மட்டும் வழங்கப்படும் பயிற்சியாயிராமல், இருக்கும் சூழலில் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து செயல்பட முழுத் திருச்சபைக்கும் வழங்கப்படும் பயிற்சியாக இருக்க வேண்வம்.

தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்குச் சிறப்பான பயிற்சி அளிப்பது மட்டும் போதுமானதல்ல. திருச்சபை மக்கள் அனைவரும் சூழல் சார்ந்த இறையியலின் அறைகூவலை உணர்ந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் தக்க வகையில் அவர்களை ஆயத்தப்படுத்துவதும் இறையியல் கல்வியின் கடமையாகும்.

சூழல் சார்ந்த இறையியல் கல்வியின் கடமைகள்:

1) உண்மையான இறைபணியில் குருவானவர் தம்மை ஊழியனாகக் காண வேண்டும். அதாவது, சபையாரால் ஏற்படுத்தப்பட்ட பணியாளல்ல. தன்னைத் தான் ஒறுப்பதும், பணியாளாகத் தன்னைச் சபைக்கு அளிப்பதும் – ஒரு கிறிஸ்தவன் தான் சொந்தமாகத் தீர்மானித்துச் செயல்படுவதாகும்.

ஒருவர் குரு அபிஷேகம் பெற்றவுடன், தாம் இயல்பாகப் போதகர் அல்லது ஆவிக்குரிய தந்தையாகி விட்டதாக எண்ணுவது தவறு. இறைமக்கள் அவரைத் தம் போதகராக, ஆவிக்குரிய தந்தையாகக் காணவேண்டும்.

குருவானவர் இறைவனோடு இணைந்து நடத்தும் வாழ்க்கையைப் பார்த்து, அவரது ஆழ்ந்த இறையறிவைக் கண்டு, அவர் மக்களின் வாழ்க்கையில் காட்டும் அக்கறையையும் அன்பையும் பார்த்து சபைமக்கள் அவரை அருட் தந்தையாக ஏற்க வேண்டும். இத்தகைய குருமாரை உருவாக்குவதே சூழல் சார்ந்த இறையியல் கல்வியின் கடமை.

2) — இன்றைய திருச்சபையிற் பெரும் பகுதியினர், தம் ஆன்மீக வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், என்ன செய்கிறேன்?'' என்ற வினாவை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆர்வத்துடன் கேட்கும் நிலையை உருவாக்குவதே இன்றைய இறையியல் கல்வியின் தலையாய கடமை.

### வாய்ப்புக்கள்:

இன்றைய சூழலில் இலங்கைத் திருச்சபை இறையியல் துறையில் ஆக்க பூர்வமான முக்கிய காரியங்களில் ஈடுபடத்தக்க வாய்ப்புக்க உள்ளன என்பதை அறிய வேண்டும். இந்நாட்டின் சிறுபான்மை இனமாகிய தமிழ் மக்களை பூண்டோடு அழிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருவதைக் கண்டும் காணாதது போன்று தென்பகுதிச் சபைகள் பேசாதிருப்பது, கிறிஸ்துவின் சிந்தைக்கு எதிரான்து என்பதை அவர்கள் உணராதிருப்பது வருத்தப்படத்தக்கது. இறையியல் சிந்தனையில், மூன்றாம் உலக நாடுகளின் திருச்சபைகள் பல வகையில் முன்னேறிவரும் இக்காலத்தில், நம் நாட்டின் இன்னறய சூழலில், கிறிஸ்தவ இறையியல் கருத்துக்களை ஆராய்வது மிக்க பயன் அளிக்கும். இன்றைய சூழலில் இறைபணி செய்யத் துணையாகவும் அமையும்.

இந்திய இலங்கை இறையியல் கல்லூரிகளின் தாய்த்தாபனமாகிய செறம்பூர் பல்கலைக் கழகம், தன் குடும்பத்தைச் சார்ந்த கல்லூரிகள் அனைத்தும் இயன்ற அளவு சூழல் சார்ந்த இறையியல் கல்வியை தத்தம் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்த வழிவகுத்துள்ளது. இந்த அரிய வாய்ப்பினை பிலிமத்தலாவா இலங்கை இறையியல் கல்லூரி, பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழும் இடத்தில் செயல்பட்டு வருகிறது.

இதே காரணத்துடன், சுன்னாகம் இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி 1983 இல், தமிழ் மாணவர், பெரும்பான்மையாகத் தமிழ் மக்கள் வாழும் சூழலில் இறையியல் கல்விப் பயிற்சி பெற வேண்டுமென்ற நோன்க்குடன் தொடங்கப்பட்டு, நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இது வரை ஒன்பது பேர், இக்கல்லூரியில் தங்கள் இறையியல் பயிற்சியை முடித்துக் கொண்டு, தெ. இ. திருச்சபையின் யாழ். ஆதீனச் சபைகளில் ஊழியஞ் செய்து வருகின்றனர்.

இக்கல்லூரியின் கல்வித் திட்டத்திலும் பயிற்சி முறையிலும், தேர்வு நியதிகளிலும் சூழலிற்கேற்ப முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தான் பணியாற்றும் சூழலில் செயல்படும் ஊழியனாக அமையவும், சபையார் அவ்வாறு வாழ வழிநடத்தவும் தக்க வகையில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.

சூழல் சார்ந்த இறையியல் கல்வியின் மையம் கிறிஸ்துவே. அவரே நம் வழிகாட்டி, தமிழ் பகுதிகளிலுள்ள திருச்சபை, குறிப்பாக யாழ். ஆதீன சபைகள், இறையியல் கல்வி தன் வாழ்வின் மையம் என்பதையும், அதை ஆதரிப்பது தன் தலையாய கடமை என்பதையும் உணர்ந்து வருவது குறிப்பிடத் தக்கது.

இறையியல் கல்வி முறை இறையரசைக் குறித்த எதிர்பார்ப்புடனும் நம்பிச்கையுடனும் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நம்பிக்கை, நம் பணிக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் இலக்கையும் தருவது இந் நம்பிக்கையே. எனவே, எந்த மோசமான சூழலையும் குறித்து நாம் சோர்வடையப் படாது. கிறிஸ்து பெருமான் ஏற்கனவே அச்சூழலில் இருக்கிறார் - செயலாற்றி வருகிறார். நாம் அவருடன் இணைந்து செயல்பட்டால், அச்சூழல் அவரின் சிந்தைக் கேற்க மாறும். அங்கும் உயிர்த்தெழுதலின் அனுபவம் உண்டாகும். பள்ளங்கள் நிரப்பப்படும், மேடுகள் சமமாகும். இந்த உறுதியான நம்பிக்கை நமக்குள் இருக்கின்றது. ஆகவே, வேறு சில எதிர்பாராத காரணங்களால் நாம் நலிந்து மாற நேர்ந்தாலும் நம்பிக்கையோடே இறுதிவரை செயல்படுவோம்.

## யாழ். போதனா வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலை வசதியில்லை

யாழ். வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கு சிற்றுண்டிச் சாலை (கன்ரீன்) வசதி இன்னும் செய்யப்படவில்லை. இதனால் அங்குள்ள நோயாளர்கள் கஷ்டப்படுகின்றனர். வைத்தியசாலை வளவில் முன்னர் இயங்கிய சிற்றுண்டிச் சாலை மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரப்பட்டுள்ளதெனத் தெரிகிறது.

## நெடுந்தீவுப் படகுச் சேவை

தற்போது நெடுந்தீவுப் படகுச் சேவை, திங்கள் வெள்ளி ஆகிய நாட்களில் மட்டும் மேற்கொள்ளப் படுகிறது. இதனை மேலும் ஒரு நாள் கூடுதலாக நடத்தவும், அரச அலுவலர் நன்மை கருதி, திங்கட்கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமை மாற்றவும் ஒழுங்கு செய்யப்படுவதாக அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிதம் -1

இப்போராட்டத்தில் சில கத்தோலிக்கக் குருமார், மெதடிஸ்த குருமார் கொல்லப்பட்டனர் யாழ். கத்தோலிக்கத் திருச்சபைப் பேராயரும் இத்துறையில் ஆற்றி வந்த பணி குறிப்பிடத்தக்கது.

இச் சுதந்திரப் போராட்டத்தில், தென் இந்திய யாழ். ஆதீன முன்னாள் பேராயரும், இன்றைய பேராயரும் அளித்து வந்த பங்கு பெரிது. குறிப்பாக நமது பேராயரும் சில குருமாரும், போராட்டத்தின் விளைவால், இராணுவத்தின் அட்டூழியத்தினால் அநாதைகள் ஆக்கப்பட்டு, தங்கள் அன்பானவர்களை இழந்து, வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்ட அனேக மக்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர். இத்துயர் துடைக்கும் பணியில் யாழ். ஆதீனத்தின் ஊழியர் அனைவரும் ஒன்று சேர்ந்து' இறுதிவரை தமிழ் மக்களின் நல்வாழ்விற்காகப் பணியாற்றுவதே தங்கள் தலையாய கடமை, என்ற உன்னத நோக்கோடு பணியாற்றி வருகின்றனர். இதில் நமது பேராயர் முன்னின்று செய்து வரும் அளப்பெரிய பணிகள் குறிப்பிடத்தக்கது.

இத்துயர் துடைக்கும் பணியில் மெதடிஸ்த சபையும், மற்ற சபைகளும் தம்மாலியன்ற அளவு தமிழ்ப் பகுதிகளில் பங்கெடுத்து வருகின்றன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள கிறிஸ்த நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க அளவு இப்பணியில் ஈடுபட்டு வருகின்றன. - கிறிஸ்தவர்கள் இன்று நடைபெறும் சுதந்திரப் போராட்டத்தில் வன்முறையில் ஈடுபடமாட்டார்கள். ஆனால் வேறு பல வழிகளில் உதவி செய்து வருகின்றனர். தமிழ் மக்களின் அவலக் குரலைக் கடவுள் கேட்கிறார். நம் மக்களின் விடுதலைக்காக கிறிஸ்தவர்களாகிய நாம் விடாது செபிக்க வேண்டும். அத்துடன் நம்மால் இயன்ற அளவு தயங்காமல், தமிழ் மக்களின் துயர் துடைக்கும் பணியில் ஈடுபட வேண்டும். தமிழ் சமுதாயத்தை சீர்கெடுத்து வரும் - களவு – சுயநலம் - குரோதம் வஞ்சகம் போன்ற கொடிய நோய்களை அகற்றும் பணியிலும் முன்னோடிகளாக நாம் திகழ வேண்டும். இதுவே கடவுளின் திருவுளச் சித்தமாகும். உனது பங்கென்ன? அன்பு வாழ்த்துக்கள்.

## நத்தார் செய்தி...

கீழ்ப்படிவு. அவர் தாழ்மையுள்ள கடவுளின் குமாரன். 'நீர் சீவனுள்ள தேவனுடைய குமாரன்' என்று பேதுரு அறிக்கையிட்ட பொழுது (மத் 16:13-20) இயேசு அவனிடம் தேவகுமாரன் பாடுபடவும் கொல்லப்படவும் வேண்டுமெனக் கூறுகின்றார். அவர் இரு கள்வர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்பட்டு உயிர் துறக்கும் பொழுது 'மெய்யாகவே இந்த மனிதன் தேவனுடைய குமாரன்' என நூற்றுக் கதிபதி கூறினான். கிறிஸ்துவின் பிறப்பு கூறும் செய்தியாதெனில் கடவுள் நம்மத்தியிலே வந்து வாசம் செய்தார் மனிதனின் பாடுகளில் தாமும் பங்கு பற்றி அவர்களை ஈடேற்றுவதற்காக அவர் மனுஷ சாயலானார் மனிதனாகிய இயேசுவின் தெய்வீகத்தன்மையும் கடவுளின் மனுஷிகத் தன்மையும் வெளிப்படுகிறது. இதை வேறு வகைகளில் கூறினால் மனுஷன் மகிமைப்படவும் கடவுள் சிறுமைப்படவும் உலகத்தில் வந்துதித்தார்.

இவ்வுலகத்திற்கு கடவுள் நம்மை ஓர் தேவதூதனாகவோ அல்லது தேவனாகவோ வெளிப்படுத்தாமல் சாதாரண ஒரு மனிதனாக வெளிப்படுத்தினார். மனித வாழ்க்கையை வழம்படுத்தும் எல்லாக் காரியங்களிலும் பங்குபற்றி ஆதரிப்பதற்காகவே மானிட ரூபம் எடுத்து பிறந்து நம்மத்தியில் வாழ்ந்தார் எனவே மனுசீசத்திற்கு எதிராகச் செயல்படுபவன் கடவுளுக்கு எதிராகச் செயல்படுகிறான். பாவம் நிறைந்த உலகத்தில் பாவம் நிறைந்த மனிதனோடு பாவம் அற்றவராக வாழ்ந்து அவனுடைய பாடுகளில் பங்கெடுத்து அவற்றை தன்மேல் சுமந்து அவற்றிற்காகவே நம் உயிரைக் கொடுத்தார். நத்தார் என்பது இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவர் தன்னைத் தாழ்த்தி சிருஷ்டி ஆனார். அதாவது கடவுள் நம்மோடு கூட இருக்கிறார். கடவுளை தேடுகிறவர்கள் அவர் யார் என்று அறிவது மாத்திரமல்ல. அவர் எவ்விடத்தில் இருக்கிறார் என்பது பற்றியும் அறிதல் வேண்டும். மனிதனின் பாடுகளில் பங்கு பற்றாதவர்கள் ஏழை எளியவர்களின் வீடுகளைத் தரிசியாதவர்கள் அவரைக் கண்டு கொள்ள முடியாது. ஏனெனில் கடவுள் மனிதனாகிய இயேசுவில் வெளிப்பட்டு மாட்டுத் தொழுவில் பிறந்து நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு பகிரங்கக் கொலைக்களத்தில் கொலை செய்யப்பட்டவர்.

இன்று நாம் ஆசியாவில் குறிப்பாக இலங்கையில் காணும் காட்சி என்ன? அடக்குமுறை, காரணமில்லாமல் கைது செய்தல், காட்டுமிராண்டித்தனமான கொலை, சித்திரவதை, காணாமல் போதல், குற்றுயிர் சடலங்கள், எரிக்கப்பட்ட சாம்பல் குவியல்கள், மனிதனின் மனுஷீகத்தை அத்து மீறிய செயல்கள், பல்லாயிரக் கணக்கானோர் பசி, பட்டினியால் போஷாக்கின்மையால் வாடுகின்ற நிலை, ஆயிரக்கணக்கானோர் எவ்வித காரணமும் இல்லாமல் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகச் செல்லும் காட்சி, விமானத் தாக்குதலினால் ஷெல் ஏவுதலினால் பயந்து வீடு வாசலை இழந்து வியாபாரத் தலங்களை உத்தியோகங்களை இழந்து அல்லோல கல்லோலப்பட்டு, 'எதுவரைக்கும் ஆண்டவரே எதுவரைக்கும்' என்ற அவலக்குரலோடு அலையும் காட்சி ஆகியன. இச்சூழ்நிலையில் 'கடவுள் நம்மோடிருக்கிறார்' என்பதன் அர்த்தம் என்ன? அவர் நம் பாடுகளில் பங்கு பற்றுகிறார் என்று நாம் எவ்வாறு உணருகிறோம்.

''நாங்கள் எல்லா வகையிலும் இடுக்கணுக்கு ஆளாகிறோம், ஆனால் நசுங்கிப் போகவில்லை; மனச்கலக்கம் அடைகிறோம், ஆனால், மனம் உடைந்து போவதில்லை; துன்புறுத்தப்படுகிறோம், ஆனால், கடவுளால் கைவிடப்படுவதில்லை; வீழ்த்தப்படுகிறோம், ஆனால், மடிந்து போவதில்லை''.
(2 கொரிந்தியர் 5:8-10)

என்ற பவுல் அப்போஸ்தலனின் கூற்று அழிவின் மத்தியிலும் ஓர் தெய்வீக சக்தி நம்மை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது என்பதை உணருகிறோம். இம்மானுவேலாகப் பிறந்தவர் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்து உயிர்த்தெழுந்து இம்மானுவேலாக நம்மத்தியில் வாசம் செய்கிறார். அநீதி, அடக்குமுறை, அக்கிரமம் ஆகிய பாவங்களுக்கு எதிராக நடைபெறும் போராட்டம் இயேசு நம் மத்தியில் வாசம் செய்கிறார் என்பதன் அறிகுறியாகும். அழிவின் மத்தியில் வாழ்வு உண்டு என்பதை விசுவாசத்தினால் உலகத்திற்குத் தெரியப்படுத்துவதே கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பதற்கு சாட்சியாகும். அப்படிச் சாட்சி பகர்ந்த ஒருவருடைய வாழ்க்கையை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசத்தில் ''புத்தல'' என்னும் ஓர் கிராமம் உண்டு. அங்கே பிதா மைக்கல் எருட்றிகோ என்பவர் நற்செய்திப்பணியில் ஈடுபட்டார். அக்கிராமத்தில் உள்ள வறியவர்களுக்காகப் பல தடவைகள் இவர் அதிகாரிகளுடன் வாதாடியதுண்டு. இதனால் அதிகாரிகள் இவர் மேல் ஐயுறவு கொள்ளத் தொடங்கினர். அடிக்கடி இவரை எச்சரித்தனர். நாட்டில் நிலவிய கொந்தளிப்பு இக்கிராமத்திற்கும் பரவியது. ஒரு நாள் பிதா மைக்கள் தமது கிராமத்தவரை அழைத்து ஆக்கிரமிப்பின் செயல்கள் அதிகரித்து வருகிறமையால் கிராமவாசிகள் தொடர்ந்து அக்கிராமத்தில் இருக்க வேண்டுமா என்பது பற்றி ஆலோசித்துக் கூறியது யாதெனில் ''தருணம் வரும் பொழுது மக்களுக்காக மரிக்கவும் அஞ்சக் கூடாது'' எனக் கூறினர். அதன் பின் ஆலய வழிபாட்டுப் பூசையை ஆரம்பித்தார். திருப்பலி முடிந்து ஆசீர்வாதத்திற்காக தனது கையை உயர்த்திய பொழுது துவக்கு வேட்டுக்கள் அவரது சிரசைக் குறி பார்த்தன. அவருடைய முகமும் தலையும் சிதறுண்டன. பலிபீடத்தில் விழுந்தார். அவருடைய இரத்தம் திராட்சை ரசப்பாத்திரத்தை நிரப்பியது. ஏழைகளுக்காக வாதிட்ட திருப்பணியாளரின் வாழ்வு முடிவுற்றது. அல்ல அது ஓர் ஆரம்பம் அக்கிராமத்து மக்கள் மத்தியில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். (ஆசிய திருப்பணி மகா நாடு அறிக்கை 1989 P. 66)

கடவுள் நம்மோடிருக்கிறார் என்பதற்கு சாட்சியாக வாழ நாமும் அழைக்கப்படுகின்றோம்.

### சுருக்க ஜெபம்

எல்லாம் வல்ல கடவுளே உமது ஒரே மைந்தன் எங்கள் தன்மையைத் தரித்துக் கொள்ளவும், புனிதக் கன்னிகையினிடம் பிறக்கவும் அவரை எங்களுக்கு ஈவாக அளித்தீரே. மறுபடியும் பிறந்து, உமது அருளால் உமது பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நாங்கள், உமது தூய ஆவியால் நாள் தோறும் புதுப்பிக்கப்பட அருள் புரியும். உம்மோடும் தூய ஆவியோடும் ஒரே கடவுளாக வீற்றிருந்து முடிவின்றி அரசாளும் எங்கள் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பொருட்டு தாழ்மையோடு வேண்டுகிறோம். ஆமென்.

## மனையியல் குறிப்புகள் :

### பேரீச்சம் பழம் :

பேரீச்சம்பழம் மிகச் சிறந்த இயற்கை உணவு. உடல் நலத்துக்கும் வலிமைக்கும் வேண்டிய சத்துப்பொருட்கள் இப்பழத்தில் ஏராளமாக உள்ளன. இது மரத்திலிருக்கும் போதே கதிரவனின் வெப்பத்தினால் கனிந்து பழமாகிறது இப்பழத்தைச் '' சேமித்து வைத்த சூரிய வெளிச்சம் '' என்றும் சொல்லுவார்கள். ஒரு காலத்தில் மெசபதேமிய நாட்டிலிருந்து, கானரித் தீவு வரையிலுள்ள பரந்த நிலப் பரப்பில் பேரீச்ச மரங்கள் பயிராகி வந்ததாகத் தெரிகிறது.

இப்பொழுது சீனாவிலும், அமெரிக்காவிலும், கலிபோர்னியா போன்ற இடங்களிலும் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. இந்தியாவில் மணற்பாங்கான பகுதிகளிலும் பாலைவனப்பகுதிகளிலும் பெருந்தொகையாக பேரீச்ச மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இங்கு பேரீச்சம் பழங்கள் எளிதாகவும், விலை மலிவாகவும் உளது ஆயினும் மிக நல்ல பழங்கள் அரபியாவில்தான் கிடைக்கின்றன.

அரபியர் மிக விரும்பி உண்ணும் உணவு, பேரீச்சம்பழம். இதனை அதிகமாக உண்பதால், அவர்கள் உடல் நலமும், நீடித்த ஆயுளும் பெற்று வாழ்கின்றனர். பேரீச்சம் பழத்தில் கார்போஹைட்ரேட்டுச் சத்து, கொழுப்புச் சத்து, புரதச் சத்து, இரும்புச் சத்து, கால்கியம் பாஸ்வரம் முதலிய உலோகச் சத்துக்கள், வைட்டமின் ஏ. பி. பி2 ஆகியன அடங்கியுள்ளன.

இப் பழத்தைத் தனியாகவும், பாலுடனும் சேர்த்து உண்ணலாம் பேரீச்சம் பழத்துடன் பாலையும சேர்த்து உட்கொண்டால், அதுவே முழுமையான உணவாகிறது. 450 கிராம் பேரீச்சம் பழமும், ஒரு போத்தில் பாலும் சாதாரண மனிதன் ஒருவனுக்கு ஒரு நாளைக்குப் போதுமான உணவாகும் சம அளவு இறைச்சியை விடப் பேரீச்சம் பழத்தில் புரதம் இருக்கிறது. இரத்தம் ஊறுவதற்குப் பேரீச்சம் பழம் பெரிதும் உதவுகின்றது. இப்பழத்தில் உள்ள சர்க்கரைச் சத்து உடலில் இழையங்களுக்கும் அவற்றின் தேவைகட்கும் ஏற்ற வகையில் இயற்கை உணவாக அமைந்திருக்கின்றது. இப்பழத்தை உண்டவுடன், உடலில் சென்றதும் மிக விரைவில் இரத்தத்துடன் கலந்து விடுகிறது. இதை எவ்வளவு வேண்டுமானாலும் உண்ணலாம் தீங்கில்லை.

மலச்சிக்கலால் வருந்துவோர் பேரீச்சம்பழத்தை உண்பது நல்லது. குடலில் இருக்கும் தீய கிருமிகளின் குணத்தை மாற்றும். நீர்க்கோவை நாவறட்சி, பித்தம், நீர்பெருக்கு போன்ற வியாதிகள் பேரீச்சம் பழத்தால் குணப்படும். இப்பழத்தை ஒரே முறையில் அதிகம் சாப்பிடாமல், உணவு உட்கொள்ளும் போது பேரீச்சம் பழத்தைச் சிறிது சேர்த்து நன்றாக மென்று உட்கொண்டால், நோய் நீங்கி பூரண சுகம் உண்டாகும்.

### தேன் சாப்பிடுங்கள் !!

- O எதனுடனும் கலக்காமல் நாள்தோறும் தேன் சாப்பிட்டு வந்தால் உடல் பப்மன் குறைந்து விட வாய்ப்புண்டு.
- O தேனில் 25 சதவீதம் சர்க்கரை இருக்கிறது. இருப்பினும் நீரழிவு (டயபிற்றிக்ஸ்) நோய்க்கு மருத்துவரின் ஆலோசனையோடு ஏற்ற வகையில் தேனை உண்டு வந்தால், நோய் குணமடையும். N. சங்கர்
- O படுக்கைக்குச் செல்லமுன், தினமும் ஒரு தேக்கரண்டி தேன் காப்பிட்டு வந்தால் நல்ல நித்திரை வரும். நன்றாகத் தூங்கலாம்.
- O குழந்தைகள் இரவில் தூங்க முன், ஒரு தேக்கரண்டி தேன் கொடுத்தால், அது குழந்தையின் நரம்புத தளர்ச்சியைப் போக்கி, தன்னிச்சையாகப் படுக்கையில் சிறுநீர் கழிப்பதைத் தடுக்கும். – சாந்தகுமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OBITUARY

We regret to record the death of Mrs. Pushpam Arulanantham, wife of the late Rev. J. T. Arulanantham, former Principal of St. John's College, Jaffna, that occurred on the 15th of November this year at the home of her eldest son Dr. Pararasan Arulanantham, No. 3, St. John's Church Road, Folkestone, Kent CT19 5BQ, U. K. Mrs. Arulanantham leaves behind two other sons Vijayan (U S A) and Dr. Karuniyan (U. S. A.) and daughter Kiruba (Australia).

Mrs. Arulanantham was a life wire of the Chundikuli Church during her long residence at Chundikuli, both when her late husband was Principal of St. John's and also for many years later till she left for the U. K. She will be remembered for the key role she played for several years in providing leadership for the annual festival of carols of the schools in the north. Before she left for the U. K. She gifted her late husband's library of theological books to the Christian Theological Seminary & Institute for Lay People at Chunnakam.

## W. C. C. TEAM VISITS SRI LANKA

A team of six church leaders sent by the World Council of Churches visited Sri Lanka between the 17th and 25th of November. This visit was primarily of a pastoral nature. The team was keen to learn of the situation prevailing in various parts of this country particularly as a result of the ethnic conflict and the present hostilities. The team also was keen to demonstrate the solidarity of Christians and churches in other parts of the world with the churches in Sri Lanka, a solidarity based in the fellowship of the body of Christ. The team met church leaders, poelticians and other leading members of the community in Colombo, south of Sri Lanka and also in the north and east of the country. On Sunday the 18th of November, the members of the team visited various congregations and participated in the respective worship services. The Rev. Dr. Newton Thurber one of the team preached at the C. S. I. Church service in Wellawatte. From the 20th to the 23rd of November the team divided into two groups of three each and visited the north and the east of Sri Lanka. Dr. Newton Thurber of the N. C. C., U. S. A., Ms. Elizabeth Salter, Executive Secretary of the Churches commission on International Affairs of the W. C. C. and Dr. Kim Sung Eun, a lecturer in sociology from the N. C. C. in Korea, visited the north. Mr. Norman Richardson of the Irish Council of Churches, Mr. Simon Moglia of the Australian Council of Churches Youth Task Group and a representative of the Church of Norway, visited the east.

(Continued on page 8)

## Jaffna College Prize Giving Extracts from the address delivered by the Chief Guest Rev. Dr. Francis Soundararaj

The New Education policy of India of 1986 has suggested some remedies to meet the changes in the educational scenario of the present century. The traditional affiliating university system has been rightly identified as the cause of the inability to change educational goals and services. The concept of autonomy for colleges to design curricula, to have their own systems of examination and to admit students and appoint teachers so as to fulfil the specific goals of the institution is advocated. The relationship to the university is described as one of "creative participation" and not control and uniformity of operation. In a limited way the reform will bring benefits. In as much as such a measure is only remedial and not conceptually evolved this may have only limited advantages of freedom, especially because state and university controls cannot be as helpfully flexible as one might desire. Nevertheless this is a step in the right direction. In our own country there are about 100 autonomous colleges with another 150 awaiting clearance to become autonomous. Our college has fared well during the last 12 years of autonomy. The New Educational policy also encourages educational reforms such as establishment of Academic Staff Colleges to facilitate updating of knowledge. Value education is another area attended to in the process of rethinking education so that the principle of equity may be accepted as an integral part of our value system. These are not enough as they are not commensurate with the rapidity and magnitude of changes which have come about in the educational scenario of our countries. We need to think and plan and do far more. Change we must, and change fast, to keep education an integral part of our life and work.

In conclusion, we may legitimately take pride in the fact that the wisdom and ideals of institutions have helped to provide the education needed for our countries through the best part of this century and the last. We have the commission to carry the torch into the next century. The secret of our strength is that these ideals, upheld through selfless and dedicated service, are eternally human and spiritual. They value the person in you and me and attempt to raise the stature of that person even to match that of Christ, our Lord. They sought to perfect our character after Him; They used sound learning to build character so that an educated person can withstand the onslaught of the Evil One to bear witness to God through faithful service rendered steadfastly where "duty, right and honour lead". Our hearts are overjoyed when we watch the men and women who are sent out of our Colleges meeting victoriously all temptations and serving God and country fearlessly and cheerfully. Such character and spirituality are time tested ideals that can never go stale. Today I congratulate all the prize winners in the hope that you will join such ranks of the students of Jaffna College who are the honour of the human community wherever they are, and I take this opportunity to wish you all both a challenge - filled future and the courage to meet it. May the rich traditions of Jaffna College be reinforced by the sense of commitment to upbuild your strife - torn nation through the promotion of peace and goodwill to establish which our Lord came to the earth. My wife and I thank you all and especially Dr. Jebanesan and other officers of the College for the honour they have bestowed on us. Thank you, and may God bless you.

## MANKULAM ROAD REOPENED FOR TRAFFIC

The Kandy Road from Vavuniya to Paranthan which remained virtually closed for the last six months from the commencement of the present offensive is now open to traffic. Vehicles from Vavuniya are able to use the Kandy Road up to the Paranthan junction.

## JAFFNA METHODIST CHURCH RELIEF OPERATION

The Rev. K. P. Govindarai and a team from the Methodist Church in Jaffna recently provided relief assistance to about 425 families in the Allaipiddy area. It was a village very badly affected during the Jaffna Fort operation.

## AN INTERESTING DATE OF BIRTH

Mr. Lalith Athulathmudali, Minister who led the military operations against the Tamils during the Jeyawardane government takes pride in the fact that he was born on the 26th of November, the very date on which the Sinhala freedom fighter Keppitipola was born. Because he shared the same birth date with Keppitipola, Mr. Athulathmudali was persuaded not to participate in the function when the Indo - Sri Lanka pact was signed in July 1987. He falt he had to dissociate himself with that event to safeguard the honour of his people.

It may be more than mere coincidence that November 26th which is also the date of birth of Mr. Veluppillai Prabakaran was observed as Hero's Day by people in the north and east of Sri Lanka.

## 50 MILLION RUPEES DAMAGE TO BATTICALOA UNIVERSITY

The University of Batticaloa suffered heavy damages due to recent military operations and it is estimated that restoration and replacement of losses would cost about Rs. 50 million. The University remains closed and no date given for its reopening.

## C. S. I. MANKULAM CENTRE FLATTENED

The Mankulam Church Centre, Day Care Centre and Vocational Training Centre which were constructed in recent years has been almost flattened due to the recent military operations in that area. Several bombs and shells hit the compound during air raids and apparently it has also been affected by the counter offensive of the militants in that area. It is estimated that restoration of the centre will cost more than 1.5 million rupees. The houses built for refugees in that area however have not been affected.

## NEW DAY CARE CENTRE OPENED

On Wednesday the 5th of December, one more Day Care Centre was opened at Gandhijikiramam in Uyarapuram, Kokkuvil East at 10.00 a. m. at a simple function when the Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the J. D., C. S. I. blessed the centre with prayer. The Diocese bought the land some time ago, and the Day Care Centre building, after long delays has just been completed. The initiative for this centre at the locality was taken by Mr. Stephen Arianayagam. The Rev. G. D. Anandarajan supervised the work at its earlier stages. At the function, the Rev. Christo T. Robarts, the Manager of the Day Care Centre welcomed the gathering, consisting largely of children and parents of the locality. Mr. K. Thirunavukkarasu, Principal of the Methodist Mission Tamil Mixed School (now under Govt.) just next door to this centre was among the guests along with all the staff of his school. Mr. Thirunavukkarasu warmly welcomed the step taken by the Diocese to start this greatly needed service at the village. He hoped most of the children after their preschool education at this Day Care Centre will be joining his school.

The Bishop in his brief remarks said that despite all the trouble and turbulence around us, the opening of this centre is a sign that God's work goes on. He assured the people of the village that this is but a small beginning and that with their co - operation, more programmes can be initiated for the uplift of the village. A fellowship tea followed the opening ceremony. About fifty children below the age of five are registered at this Day Care Centre.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Some Reflections on the Developing Crisis

The monotonous drone of a plane, scouring the countryside and the chatter of small arms fire at a distance, punctuated by the thump of artillery shells grimly remind us, as we write these notes, that the current offensives in the North have lost neither their sting nor their steam.

Hitting the news-stands with an undying momentum since June this year have been the disturbing dimensions of the Crisis the phlebotomous episodes in ths Eastern Province and the aerial attacks in the Northern, which have made 1990, a year to remember and not to forget.

But what even a Diogenes with his day-time lantern cannot fail to discover amidst the scenes of desolation, is the stamp of vitality and vehemence in every face in the street, be that it of a farmer or industrialist battling against the crippling shortage of electric power or that of a refugee denied the consolations of his own dwelling and the quiet friendliness of his trees, farms and fields.

The most basic energy sources are today lacking in the North — fuel for cooking, light to read by, and power for the water-pump.

It is not easy to put a price tag on the legacy of changes in attitudes and practices which the Crisis leaves behind or the resurgence of the human spirit which it has generated. "Martyrs Day" in Jaffna was celebrated with a flare, unprecedented in her annals. Memories both vivid and painful were etched deeply in many hearths and homes.

But resilience and ability to absorb hardship not withstanding, the blessings of political stability with its concomitant opportunities for a rhythmic life, free from anxiety and foreboding, are a far cry for the youth of the North.

Educationally, the G. C. E. (O, L) Examination which is currently being held in seven Provinces in the Island (as we write these notes) is not being held in the North and East. The External Examinations of the Peradeniyia University for which some 1000 candidates have applied this year will not be held at the Jaffna Centre according to news reports.

The note of exhausted patience of the Jaffna University students would have been aggravated by the announcement appearing in the MURASOLI 8-12-1990 that the Second M. B., B. S. and the third M. B., B. S. Examinations have been postponed. They were due to be held in December this year.

It is a sad reflection that the neon-glow of Education which once bathed the Tamil areas of the North is now blinking off, with students unable to sit even for the basic school Examination as the fifth standard Scholarship Examination which serve as a useful yardstiek in Educational standards as the end of the Primary School career whether the child makes the grade or not for the Scholarship and the G. C. E. (OL) Examination which opens the window on a student's career after his Secondary education, even if the student does not make the grade for pursuing higher education. Seventeen Schools in the Jaffna District have suffered considerable damage, according to news reports.

Above all, in the sphere of Higher Education at no time has a University Degree (General or Professional) been such a mirage for the Jaffna undergraduate as at the present time.

### Holidays

The Diocesan office will be closed for Business during Christmas from the 23rd of December 1990 to the 1st of January 1991. (Both days inclusive)

### 175 th Aniversary.........

On Sabbath August 4th we assembled at Tellippalai to pay the last tribute of affection to his remains. At the house we engaged in devotional exercises, and then followed the corpse which was borne by the native members of our Church to the grave, where an apporpriate address was made to spectators. We cannot do justice to our own feelings without saying much more repecting our departed brother than the limits of this letter will admit. We shall therefore soon forward to the committee a detailed account of his last sickness and death. We cannot however close this account without saying of him, "the memory of the just is blessed"

Missionary Herald May 1823.

### W. C. C. .........

The team which came to the north met the Jaffna Citizens Committee and the Roman Catholic Bishop the Rt. Rev Deogupillai at the Catholic Bishop's residence. They also met a representative group at the Ottley Hall, Jaffna College, Vaddukodddi. They visited various parts of the peninsula seeing some of the damages and the refugee camps. They had an interview with the Government Agent of Jaffna and the Director and staff of the Jaffna Hospital. They also visited the Green Hospital, Manipay and the Christian Theological Seminary & Institute for Lay People at Chunnakam. The people in the north and east were particularly happy that impartial observers from outside the country were able to visit us and assess the situation for themselves. The team that came to the north also visited the Kilinochchi Paranthan area and the Shalom-nagar Farm. They had to experience all the travails that travellers to Jaffna these days have to undergo.

The two teams on their return to Colombo met Church leaders and the N. C. C. Justice Commission members and shared their impressions and experiences. It is hoped that this visit would help the world church to understand the problems that have afflicted our peoples for the last so many years.

### VADDUKODDAI.........

news today...," sung by the entire congregation, with its glorious ' Nowell, Nowell, Nowell" sung loud and clear. A final note of quiet worship was the unusual Japanese carol " The Silent Night," composed in 1941 by Chugoro Torii: "The silent night of winter falls, / The stars gleam clear and chill" It left us with the mood of the world around us but with the " tidings brought of splendid joy / Which makes the sad heart sing."

Before the benediction the traditional Afro-American " Amen " closed the programme. With the really lovely carols, and the good work of the choir, this participant at the service would have liked more differentiation in volume in the choir's singing. Yet, all were delighted to have a real Christmas service in the midst of destruction and deprivation.



The Management of The Morning Star & A. C. M, Press wishes our readers a Merry X'mas and a Happy New Year.

With teen-agers and adults in their twenties riding the crest of a "reforms" surge, an EDUCATION COMMISSION is a necessary prerequisite to douse the flames of student unrest. But let's get one thing straight. The task of the Commission would be Sisyphean unless the New Educational framework is designed to FRAME eventually the Peace in Sri Lanka.

It was CHOU EN LAI of China who, waxing eloquent on the occasion of Henry Kissinger's first visit to his country, exclaimed "There is turmoil in the heavens and we have the opportunity to end it"

The overpowering presence of "crises areas" in the world today is not so tragic as the signs some of them show of moving on a long term time scale.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/140/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at The American Ceylon Misson Press, 182. 1st, Cross Street, Jaffna, on Friday, the 14th of Dec. 1990 and published by The Rev. G. D. ANANDARAJAN, 182. First Cross Street, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org